# நேர்மையான விறகு வெட்டி

விறகு வெட்டி ஒருவர் தனது உழைப்பைப் பிழைப்பாகக் கொண்டு ஒரு ________________ [**ஆற்றின்/ குளத்தின்** ] கரையில் விறகு வெட்டி வந்தார். ஒருநாள் மரத்திலிருந்து அருவியில் விறகு வெட்டிக் கொண்டிருந்தார். அப்போது, அவரது கோடாரி நீரில் ________________ [**நழுவி** / **தவறி**] விழுந்து விட்டது. தன் கோடாரியைப் பரிபிகொடுத்த ________________ [**விறகு வெட்டி/ மர வெட்டி**] விறகு வெட்ட முடியாமல் வருந்தியிருந்தார். அவ்வேளையில் அங்கு ஒரு தேவதை ________________ [**தோன்றியது** / **வந்தடைந்தது**].

விறகு வெட்டியின் நிலையை ________________ [**அறிந்த/ நினைக்க**] தேவதை வெள்ளிக் கோடாரி ஒன்றைக்காண்பித்து, "இதுதான் உனது கோடாரியா?" என்று கேட்டது. அந்த விறகு வெட்டி, "இது எனது கோடாரி இல்லை," என்று கூறினார்.

பிறகு அந்தத் தேவதை ஒரு தங்கக் கோடாரியைக் ________________ [**எடுத்து /காண்பித்து**] "இதுதான் உனது கோடாரியா?" என்று கேட்டது. அந்த விறகு வெட்டி "இதுவும் எனது கோடாரி இல்லை" என்று கூறினார்.

இறுதியில் தேவதை ________________ [**நெகிழி /இரும்புக்**] கோடாரியைக் காண்பித்து, "இதுதான் உனது கோடாரியா?" என்று கேட்டது. விறகு வெட்டியோ தனது கோடாரியைக் கண்ட மகிழ்ச்சியில், "ஆம்! இதுதான் எனது கோடாரி" என்று பூரிப்புடன் கூறினார்.

அவரது ________________ [**நேர்மையைக் / பொய்யைக்** ] கண்டு ________________ [**வியந்த** / **மகிழ்ந்த**] தேவதை அந்த மூன்று கோடாரியையும் விறகு வெட்டிக்குப் ________________ [**பரிசாக/ இனாமாக**] அளித்துச் சென்றது.

LIVEWORKSHEETS